திருச்சானூர்

# ஸ்ரீபத்மாவதி அம்மனுடை

# பிரதாப வைபவ கீர்த்த



இஃது
பெரியோர்களால் யெழுதப்பட்டு
திருப்பதி புஸ்தக வியாபாரம்,
எம். வி. ருத்திரைய்யநாயுடு
அவர்களின்
மாவதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.
1932.

*Registered Copy Right.*

14 NOV 1932

O25:417
N32
149298

உ

ஸ்ரீராமஜெயம்.

திருச்சானூர்

# ஸ்ரீபத்மாவதி அம்மனுடைய "பிரதாப வைபவ" கீர்த்தனை.

இதில் கீர்த்தனைகள், துயிலெழுப்பல், அலங்கார ஆராதனை லாலி, ஊஞ்சல், கும்மி முதலியன அடங்கி யிருக்கின்றன.

இஃது

பெரியோர்களால் யெழுதப்பட்டு

திருப்பதி புஸ்தக வியாபாரம்,

**எம். வி. ருத்திரைய்ய நாயுடு**

அவர்களின்

ஸ்ரீ பத்மாவதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1932.

*Registered Copy Right.*

# அட்டவணை.

1. வினாயகர் துதி.

2. தாயார் துதி.

3, துயிலெழுப்பல்.

4. நிலக்கண்ணாடி காட்டுதல்.

5. நீராடல்.

6. திவ்யாலங்காரம்.

7. திருமாலை.

8. ஆரத்தி.

9. கொலுவிருத்தல்.

10. ஊஞ்சல்.

11. லாலி.

12. ஓடம்.

13. தியான தெரிசனம்.

14. பள்ளிகொள்ளல் (சயனம்)

15. மங்களம்.

16. கும்மி.

17. வாழ்த்து.

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீ பத்மாவதி பிரதாப வைபவ பாட்டு.

## விநாயகர் துதி.

வெண்பா.

முக்கண்ணனார் மகனே முருகனுக்கு மூத்தவனே
திக்கவர்கள் போற்றும் தேசிகனே—யிக்கணம்யான்
அன்புடைய வலர்மேலு அன்னை புகழ்த்தனைப்பாட
தன்மையுடன் தமிழ்வரமேதா.

## தாயார் துதி.

வெண்பா.

தாமறையிலுதித்தவளே தாயாகி நின்றவளே
மாமறைகள் புகழ மகிழ்ந்தவளே—பாமரரை
கார்க்கப்பிரந்தவளே காதலுடனுன் சேவைப்
பார்த்துப் பருகுவதேபால்.

இராகம் உசேனி - அடதாளம்.

பல்லவி.

தாமரையிலுதித்த தாயே தயாபரி நீ
சந்ததம் கிருபை செய்குவாய் (தா)

அநுபல்லவி.

சாமள வர்ணருக்குப் பிரேமை யுள்ளநாயகி
சாமகானப்பிரிய சகலபலப்ரதாயகி (தா)

சரணம்.

ஆதிபரம்பொருளே ஜோதிமயமானவளே
ப்ரீதியுடன் காப்பவளே பொருள் தருபவளே
வேதவேதியர்களை சோதித்தருள் பவளே - காம
க்ரோதாதிகளை சேதித்திட வல்லவளே (தா)

சத்வ குணசுந்தரி சர்வ மங்களகாரி
சித்தர்கும் முக்தர்கும் நித்யானந்தலஹரி
சதா சர்வாலங்காரி ஸ்ரீஜெகதீஸ்வரி
சாற்றுங் கணபதிக்கு சமயம் வந்தருள்புரி (தா)

(தசரத ராஜகுமாரா)

இராகம் இந்துஸ்தான் பியாகு - தாளம் - ஆதி.

பல்லவி.

ஆகாசராஜ குமாரி சுகுமாரி
அலங்காரி சிங்காரி (ஆகா)

அனுபல்லவி.

நேசமாயுமடி நான் பணிந்தேனே
நாளு முனதுபுகழ் பாடதுணிந்தேனே
நேயமோடும்மை யான் துதித்தேனே
நித்ய மங்களமுடன் வாராய் வரம் தாராய்
எனைக்காராய் கடைக் கண்பாராய் (ஆகா)
உலக மீரேழும் படைத்திட்டதாயே
உத்தம தேவர்கட் கமுதமளித்தாயே
உத்தம பத்ம பீ டத்திலுள் தாயே
ஊமை எழுத்தருநும் தேவி என்தன் ஆவி
வந்தேன் தாவி கணபதி கூவி (ஆகா)

(காம சுந்தராங்கி என்ற மெட்டு.)

இராகம் தன்யாசி - தாளம் சாப்பு.

பல்லவி.

அலர்மேலு மங்கா உனது அடியிணையே
அனுதினம் மணிந்திட அருள்புரி (அல)

முடுகு.

கெட்டு விட்டேன் கலவியால்
கட்டுப்பட்டேன் கலிதனில் (அல)
குடும்ப நிலை கடந்ததினால்
படும் துயரமதும் மிகுந்திடாது (அல)
கட்டுப்பட்டுக் கருப்பையில்
தட்டு பட்டு கெட்டிடாத முன் (அல)
கவிகளுனை பாடிடவே
எடுத்து கணை தொடுத்து சரம்
விடுத்து பகை யறுத்திடுவாய் (அல)

அனுபல்லவி.

மலர் மாலையே புனைந்து
மகத்துவங்கள் மிகத்துலங்கும்
இகந்தவர்க்கு சுகத்தையருள் (அல)

சரணம்.

அண்டர் முனி - வர்கள் - போற்றி
அன்பர்யாவரும் மலர்மாலை சாற்றி
தொண்டன் கணபதி துதி யேற்றி
உடல் பொருள்களை - உனக்கிதுததி
திடமுடன் தத்தமே யருள்புரி (அல)

## துயிலெழுப்பல்.

இராகம் - பூபாளம் - தாளம்.

பல்லவி.

எழுந்திரும் ஸ்ரீ அலர்மேலுமங்கம்மா
ஆதித்தன் உதித்தனன் (எழு)

அனுபல்லவி.

பொழுதும் புலர்ந்தன பொற்கோழிகூவின
தொழுதுன் திரு வடி பணிந்தேன் அம்மா

சரணம்.

வாணி யிந்திராணி முதல் வாசவன் குபேரன் தேவரும்
பாணி லுபகாரத்துடனே பணிந்து ஸ்துதிக்கிறார்
பானுவுமுதயமாகி பாதசேவை செய்ய நிற்கிறான்
அணிசெம் பொனிறொளி திகழ ஆனந்தமாகவே (எழு)
கங்கை காவேரி தீர்தமுதல் மங்கைய ரெல்லாங்கூடி
பங்கஜ மலர்சேவை காணவே நிற்கின்றார்
சங்கை யில்லா திருவாபரணமணிந்து கையில்
தங்க கண்ணாடியும் கொண்டு நிற்கின்றார்கள் (எழு)
வேதியர்கள் கூடிநல் வேதங்கள் எதுரார் வீ
பூதி தரிததடியார்கள் பதிகங்கள் பாடுரார்
ஆனந்த முடனரம் பையர் ஆல மேந்தி நிற்கின்றார்
ஆசையாய் மங்கைகளும் அரும் மங்களம் பாடுறார் (எழு)
பாவலர் நாவலர்கள் புகழ்ந்தே துதிக்கின்றார்கள்
காவலர்கள் கச்சைகட்டி காத்து வருகின்றார்கள்
தெவதாசிகளெல்லாம் தோரணம் கட்டி நின்றார்கள்
ஆவலாய்க் கணபதியின் னடிமலர்ப் பணிகின்றான் (எழு)

நிலக்கண்ணாடி காட்டுதல்.

இராகம் பிலஹரி - தாளம் - ஆதி.

பல்லவி.

கண்ணாடிப் பாராய் கோதை பத்மாவதி நீ (கண்)

அநுபல்லவி.

விண்ணவர்ப்புகழும் வடிவுடையளே நீ (கண்)

முடுகு.

சித்தர் முத்தர் பக்தர் நித்தம் துதித்திட (கண்)

சரணம்.

மண்ணளந்த மாயன் மனதுக்குகந்தாளே
கண்ணின் மணியலர் மேலுமங்கை யாளே
எண்ணிலாவுயர்க் கிரங்கும் பூமகளே
கண்யமுடன் கணபதிக் கருள் புரிந்தவளே. (கண்)

# நீராடல்.

(நடனமாடினார் நந்தனார்)

இராகம் மாயாமாளவகௌளை - திரசுர தாளம்-

பல்லவி.

நீருமாடினளலர் மேலு மங்கை நல்

அநுபல்லவி.

பாரிலுள்ள பக்தர்களை பக்ஷமுடனே ரக்ஷித்திடவே (நீரு)

சரணம்.

கதம்ப கஸ்தூரி வாசமும் வீட
அதர் ஜவ்வாது மதிலே கூட்டிட
ஆனந்தமுடன் பன் னீரும் சேர்த்திட
அரம்பை மாதர்கள் மங்களம் பாடிட
அற்புதமகிமையும் விளங்கிட அமரர்கள் தினம் தினம் துதித்திட
அன்புடன் கணபதிபாடிட அடிய வர்குறைகளு மோடிட (நீரு)

# திவ்யாலங்காரம்.

இராகம் நாகவராளி - தாளம் - ஆதி.

பல்லவி.

சிங்காரம் செய்து கொண்டாள்
பங்கஜநாபர் மகிழ் அலர்மேலு மங்கையும் (சிங்)

அனுபல்லவி.

எங்கும் நிகரின்றி விளங்குகின்ற பூமாது
பொங்கி மகிழ்உடன் மங்கள ஸ்தானம் செய்து (சிங்)

சரணங்கள்.

ரத்தின பதக்கம் அசைய ஆணிமுத்துடன்
நத்து புலாக்கு யெசெய
பத்தரை மாத்து தங்கஒட் யாணங் கங்கணம் வங்கி
கத்திரிபாவல் கம்பல் ஜம்பஸா ஜிமிக்கியுடன் (சிங்)
மடவாரில் சிரந்தவள் சிரசில்
ஜடநாகம் ராக்கிடி துலங்க
கொடிய துன்பங்களை அலைக்கவந்துதித்த
வடிவுடையுவலர் மேலு மங்கையவளும் (சிங்)
நெத்தியில் திலதஞ் சொலிக்க இடையி
லுத்தம வஸ்த்திரம் பிரகாசிக்க
மெத்த விசித்திரமான ரவிக்கை பாஜி பந்துடன்
இத்தரை மானிடர்கட்கு இன்பமாய் சேவை கொடுக்க (சிங்)
சந்திர வதனம் துலங்க
செந்தாமரைப் பாதச்சிலம்பு கலகலெங்க
அந்தர முனிவர்களானந்தம் மானந்தமென்க
வந்திடு யடியாரெல்லாம் வரமதுகொடு வென்க (சிங்)
கெந்தப் புனுகு ஜவ் வாது கஸ்தூரி பூசி
மந்தகாசமாய் மாதர்களுடன் யேசி
மந்திர மறைகளுடன் முனிவர்புகழ் விஸ்வாசி
சந்தத கணபதியும் சாற்றுன் தமிழ்க்கரசி (சிங்)

# திருமாலை.

(இராமமூர்த்திக் கிணையானவர்)

இராகம் பியாக் - தாளம் - ரூபகசாப்பு

பல்லவி.

மாமலர் சூடிய மங்கையலர்மே லுக்கிணையுமுண்டா

அனுபல்லவி.

தாமரை மலரில் தானு யுதித்துத்
தாரணிபுகழ வந்தவள்
திருச்சானூர் தனிலே வாழ்ந்தவள்
தர்மவான்களுக்கே வரம் தந்தவள் - நானும் (மாம)

சரணம்.

மல்லிகை முல்லைமா மருவுமருக்கொழுந்து
மன்மத பாணமும் வாசமே
மாமலர் களைச்சூடும் நேசமே
முனிவர்களிடம் நாளும் விசு வாசமே
கொண்டு குருகத்தி கருமுகை புன்னைபூச்
செண்டு சண்பக மலர் சாற்றிட
தினம் தேவர்கள் வந்து திருவாசுஷியால்
வெண் சாமரை வீசியே போற்றிட் அருள் (மாம)
பாலன் கணபதி பாடுங் கவிமாலை - நானும்
பத்மாவதிபாதம் பூண்டதாம்
இந்த பூவுலகமெங்கும் பேர்கொண்டதாம்
பவசாஹரவினை யெலாம் தாண்டுதாம் நல் (மாம)

# ஆரத்தி.

(கதர் கப்பல்கொடி காணுதே)

இராகம் பாசு - தாளம் ஆதி.

பல்லவி.

கர்ப்பூர தீபாராதனை
கமலத்தமர்ந்த அலர்மேலு மங்கையை காண (கர்)

சரணங்கள்,

வேத வேதியர்கள் வேதங்களோதிட
மாதர்கள் யாவரும் மங்களம் பாடிட
பேறிகை மத்தள வாத்தியங்கள் முழங்கிட
தேவருங் கூட அ
ரம்மை மா ராட நம்
துன்பங்க ளோட நானும்
அன்பன் கணபதி பாட அடியவர்கள் கொண்டாட (கர்)

## கொலுவிருத்தல்.

இராகம் - தன்யாசி - தாளம் - ஆதி,

பல்லவி.

கொலு விருந்தாளே அலமேல் மங்கை
கொலுவு விருந்தாளே

அநுபல்லவி.

கொலுவி லிருந்தாள் குதூகலமாக
கோடிசூர்ய பிரகாச மண்டபத்தில் (கொ)

சரணம்,

அமரர்கள் யாவரும் அனுதினம் துதிக்க
அப்சரஸ் ஸ்ரீகளும் ஆலத்தி யெடுக்க
அண்டத்துயிர் களெல்லாம் அன்னையென பஜிக்க
அன்புள வடியார்களாகமது களிக்க (கொ)
தும்புரு நாரதரும் துதித்துமே பாட
துந்துபி யுடன் பலர் தூயசாமரை யோட
துளசி தாஸருடன் துகாராம் சுவாமியாட
துன்பம் துலைப்பாயென தூயன் கணபதியும் நாட (கொ)

## ஊஞ்சல்.

இராகம் - பைரவி

பக்தி யெனும் வைராக்ய பலகைசேர்த்து
சக்தி யெனும் சரங் கண்டு கால்கள்நாட்டி
கதிர்மதி யெனுங்கலையின் கொடுங்கைபூட்டி
கன்னியலர் மேலுமங்கை ராடிரூஞ்சல்

முக்தி யெனும் முச்சுடரின் மூலங்கூட்டி
சித்தியெனும் நாதாந்த நிலமை நாட்டி
சுத்தமெனும் சுயஞ்சோதி சொரூபங் காட்டி
சுகமெனும் மங்கையவ ளாடி ரூஞ்சல்.

## லாலி.

லாலி ஜெகதாம்பா லாலி சுந்தராம்பா
லாலி யலர்மேலு மங்கை லாலி (லாலி)
சத்ய லோகனை பெற்ற ஸ்ரீனிவாசன் மகிழ்ந்த
உத்தமி யலர்மேலு மங்கை லாலி (லாலி)
தேவாதி தேவர்ஸ்துதி செய்திரஞ்சும் தேவி
தாஸர்பணி யலர்மேலு மங்கை லாலி (லாலி

## லாலி.

இராகம் - ஸ்யாமா.

லாலி லாலி ஸ்ரீதேவி லாலி பூதேவி லாலி
ஸ்ரீபத்ம நிவாஸ வலர் மேலு லாலி (லாலி)
பத்ம மத்யோர்பவாம் பத்மாஸன ஸ்தீதாம்
பத்மாலங்கிருத தாம்பாஹிலாலி (லாலி)
சர்வதுஷ்ட பயங்கரி சர்வலோகாரக்ஷகி
சித்திபுத்திப்ரதேதேவி பாஹி லாலி (லாலி)
வரதாபயஹஸ்தினி ஸ்ரீவரலக்ஷ்மி
விஷ்ணுவக்ஷஸ்தள னிவாஸலாலி (லாலி)
காயத்ரீ கிருபாகரி கல்யாண குணசாலினி
கண...திபூஜீத பாஹிலாலி (லாலி)

## லாலி.

இராகம் - ஆனந்தபைரவி.

மூலமுதல் பொருளே லாலி நல்ல
முத்தியளிப்பவளே லாலி
ஆகாரமானவளே லாலி
ஆதரிக்க வந்தவளே லாலி (லாலி)
சங்குசக்ரமுடைய லாலி தினம்
சதுர்மறைகள் புகழும் லாலி
பார் புகழவந்த லாலி அன்று
பார்கடலில் பிரந்த லாலி (லாலி)

| | | |
|---|---|---|
| அமரர் குறைதீர்த்த | லாலி | அவ் |
| வரக்கர் கருவறுத்த | லாலி | |
| அலர்மேலுமங்கை | லாலி | கணபதிக்கு |
| அன்புடன் அருளும் | லாலி | (லாலி) |

## ஓடம்.

இராகம் - புன்னுகவராளி - தாளம் சாபப்பு

பாருலகெலாம் தான்மகிழும் நல்ல
பத்மமதனில்வாழும்
கோரும்வரம் அடியார்குகந்த நல்
கோதை யலர்மேலுவின் முன்

### முடுகு.

| | |
|---|---|
| முப்பத்திரெண்டரம் | மகிழ்வாகசெய்து |
| முன்னவளும்யானே | முகவணைப்பணிந்து |
| மால்மருகன்தன்னே | மனதில் நினைந்து |
| மனமெனும் பலகையை | முன்செப்பனிட்டு |
| தொண்ணூற்றியாறு | தத்துவமெல்லாம் |
| தோணதொருபாய் | மறமாககட்டி |
| வேதங்கள் நாலேயும் | நங்கூறமாக்கி |
| வோமென்னும் மந்திரம் | கொடியாககட்டி |
| கலேக்கியானம் அருபத்தி | நாலுமேசேர்த்து |
| கப்பலுக்கேநல்ல | ஆணியாய்தைத்து |
| ஆகமபுராணத்தை | கயிருகக்கட்டி |
| அழியாத ஞானத்தை | கப்பலு மாக்கி |
| பாசபந்த மென்னும் | பெருங்கடல் தாண்ட |
| பக்தி வைராக்கிய | படிதன்னிலேரி |
| வாசியென்ற பெருங் | காற்றும் பிடித்து |
| வேகம தாகவே | யோடிடும் போது |
| சதுர்முக தேவனும் | சுக்கான் பிடிக்க |
| சத்வ நிலேதன்னுல் | சரியாக ஓடி |
| ஆனந்த சாகரக் | கரைதன்னே கண்டு |
| ஆகாச ராஜனும் | அருந்தவம் புரிந்தான் |

| | |
|---|---|
| புத்திர வில்லையென்று | பெருந்தவம் புரிந்தான் |
| பரமனருளினல் | பாக்யங்களடைந்தான் |
| பொன்னேரு கட்டியே | பூமியை உழவே |
| பொற்று மரையுடன் | பாவையும் காண |
| தேவாதி தேவர்கள் | கண்டுகளி கூர |
| ஜெகத்துயிர்கள் யாவும் | ஆனந்த மீற |
| அப்ஸர ஸ்ரீகள் அக | மகிழ் வாகபாட |
| அரம்பை யூர்வசி | மாதர்களு மாட |
| எங்கும் ஜெயபேரி | எக்காளம் ஒலிக்க |
| மங்கை பிரந்தாளென | முனிகள் களிக்க |
| மங்களமாகவே | யிங்கிதமுடனே |
| மங்கை யலர்மேலு | வென வருகுதே கப்பல் |

ஏலேலோ - ஏலேலோ - தத்தய்யா
ஏலேலோ - கோவிந்தா

| | |
|---|---|
| இவ்வித வைபவங்கள் | எங்கும் திழைக்க |
| இருஷிகேசனிடம் | இருடிகளு முரைக்க |
| போதம் தனைத்தரும் | ஸ்ரீநாதனுகந்தருளி |
| பூரிப்புடன் பூமி | தன்னிலெழுந்தருளி |
| அருளென்ற வேடனுய் | அழகுடனே வந்து |
| அஷ்டாக்ஷரத்தாலே | யலங்கரித்துகொண்டு |
| ஜெயமென்னுங் கோதண்டம் | அசையாமலெடுத்து |
| சர்வாபரணங்கள் | மேலேதரித்து |
| மகிழுடன் மங்கையை | மணக்க நினைத்து |
| மங்கள கல்யாண | புரவியையழைத்து |
| ஆனந்தமுடன வரும் | ஆரோகணித்து |
| பரமானந்தமாகவே | மங்கையை நினைத்து |
| இந்திரன் பிர்மாதி | தேவருடன் கூட |
| இருடிகள் யாவரும் | இன்பமாய் கொண்டாட |
| தும்புரு நாரதர் | கீதங்கள் பாட |
| சித்தர் பூமாரியது | பெய்து கொண்டாட |
| மண்டலம் புகழ்கீத | ஸாரங்கி கௌரி |
| வாராளியும் பரசு | கேதார கௌரி |
| அண்டர்கள் மகிக்கும் | ஸ்ரீ கௌரி கல்யாணி |
| ஆனந்த பைரவி | பூரி கல்யாணி |

| | |
|---|---|
| கண்டமெழுநாத | நாம கிரியை தோடி |
| கல்யாணி மோஹனம் | தேசிகா தோடி |
| காம்போதி யமுனை | கல்யாணியின் சிந்து |
| கண்டா கமாசு கற் | கட கௌளி பந்து |
| நன்றும் பியாகடை | பியாகு காந்தாரி |
| நல்ல பிலஹரி காபி | பைரவி முகாரி |
| தன்யாசி நாட்டையும் | தேவகாந்தாரி |
| தர்பார் சைந்தவி | சுத்த சாவேரி |
| தேசிக முகாரி | ஸௌராஷ்ட்ரகன் தோடி |
| ஜங்லா ஸைந்தவி | துஜாவந்தி நாடி |
| சாரங்க பைரவி | கோவிந்த லளிதம் |
| சரஸாங்கி செஞ்சுருட்டி | மதன பூபாளம் |
| மாஞ்சி மத்யமாவதி | மணிரங்கு லளிதா |
| மனோகரி புன்னாகவராளி | போதாதா |
| மீசன்சுருட்டி | முதலெது குலகாம்போதி |
| இன்றும் அநேகவித | ராகங்களோடி |
| மங்கள மதாகவே | யிங்கிதமுடனே |
| மங்கை யலர்மேலு | தன்னை மாயவளும் மணந்து |
| யெல்லோர்கும் சம்பிரமதான | மது செய்து |
| வாகாசன் புத்திரியை | விவாகம் புரிந்து |
| கோமளவல்லியின் | கடாக்ஷத்தினலே |
| கோவிந்த னென்றும் | பேர்கொண்ட கப்பல் |
| பக்தஜனங்களை | கரையேற்றநினைத்து |
| பரமபதத்திலிருந்து | வந்தகய்யாகப்பல் |

### திருபதம்.

| | |
|---|---|
| பக்தமனோகரி | பரம தயாபரி |
| நீத்யானந்தலஹரி | யென்சித்தமகிழீஸ்வரி |
| ஆதிபிரக்யாதி | பரஞ்சோதி |
| கணபதியின் துதி | |

இச்சகம் புகழ அருள் — ஏலேலோ
அச்சுதர்க்கு கந்தவனே — ஏலேலோ
ஸ்ரீனிவாசஜெயம் கோவிந்த — ஏலேலோ
ஸ்ரீயலர்மேலு ஜெயம் — ஏலேலோ

ஏலேலோ - ஏலேலல்லோ
ஏலேலோ - கோவிந்தா — ஏலேலோ

# தியான தெரிசினம்.

இராகம் - கதனகுதூகலம் - தாளம் ஆதி.

பல்லவி.

கருணாகரி ஸ்ரீ காயத்ரீ தேவி
கருணைசெய்குவாய் கமலவாசினி (கரு)

அனுபல்லவி.

வரதாபய ஹஸ்த்தபூஷணி ஸ்ரீ
வெங்கடேஸ்வரர்கு பிரிய மனோகரி (கரு)

சரணம்.

நாரதாதி முனிகள் நாளுமுன்னை துதிக்க
ஸ்ரீநாராயணனும் நாடிஉன் கைபிடிக்க
நான்மறைகளும் துதிபூஷணி
நம்பினேன் அம்பிகா சம்ரமதாகவே (கரு)

சிட்டஸ்வரத்திற்கு சாஹித்யம்.

கதன குதூகல மிதுலாபுரிவளர்
பராபரியே
தகிடதிமி ததிங்கிண
திமிகிடகிட வென
கணபதி அதிபணி தழகிய பதமலர்
இதுததியருள்புரி (கரு)

(ஞானக்கடலோரனே எனும வர்ண மெட்டு)

இராகம் - தோடி - தாளம் ஆதி.

பல்லவி.

பத்மாவதிதேவியே தாயே உனை
பாடிவந்தீதனிந்தப் பாலனை காத்தருள் (பத்)

அனுபல்லவி.

பக்தர்க்கருள் புரியும் பரம கிருபாகரி
பரந்தாமனுக்கு கந்த மனோகரி
யாமரர்களை காக்கும் தயாபரி
பக்தியாய் உத்தமர் நித்தமும்
நத்திட சித்தம் வைத் தருள்புரி (பத்)

அல்லும் பகலுன்னேயே - உன்தன்
அன்பன் யானும்பாடி பணிந்தேன்

ஆகாசராஜனும் பெற்ற குமாரியே
ஆனந்தமாயன்பர் துதிக்கும் சுகுமாரியே
பரமானந்த பத்பத்தில் அமர்ந்த கெம்பீரியே
கணபதிக் கிதுகதி யருள்புரி
கருணகரி கிருபாஹரி தயாபரி (பத்)

## சயனம்.

இராகம் நீலாம்பரி.

ஆரோரோ ஆரிரரோ
ஆரோரோ ஆரிரரோ

1 அகிலமெல்லாம் படைத்து அன்புடனே காத்தருளும்
அலர்மேலு மங்கை யெனும் அழிகியே நீ கண்வளராய்
2 ஆதியாயனதியாகி யாதாரபூதமாகி
ஆனந்த சாகரத்தில் அமரந்தவளே நீ கண் வளராய்
3 இருவினையை தானகற்றி இருதய கமலந்தன்னில்
இருந்தேவிளையாடிவரும் இன்பமே நீ கண் வளராய்
4 ஈஷணத்திரயமருத்தே ஈடேற்ற வந்துதித்த
ஈஸ்வரியே யெங்கள் குலக்கொழுந்தே நீ கண் வளாயாய்
5 உம்பர்கள் போற்றிடவே உலகமெலாம் புகந்திடவே
உத்தமாய்த் தாமரையில் உதித்தவளே நீ கண் வளராய்
6 ஊத்தைச் சடலமதை உண்மையென்றே நம்பிவிட்டேன்
ஊமை எடுத்தருளும் உத்தமியே நீ கண் வளராய்
7 என்னுருயிரோ எங்கள் குலத்தவ மணியெ
எண்ணே எழுத்தே நீ எழிலுடனே நித்திரை போ
8 ஏழைகட்க் கருள்பவளே ஏகாந்தமானவளே
ஏழடுக்கு பஞ்சணையில் எழுந்தருளி நித்திரை போ
9 ஒழிவிலொடுக்க மதை உண்மையுடனுலகிற்கு
ஒருவிரலால் காட்டிவரும் உத்தமியே நீ கண் வளராய்
10 ஓட்டைப் பாண்டமதில் ஓடுகின்ற காற்றடைத்து
ஓமென்ற ஒளியதனை உகந்தருளி நீ கண் வளராய்

11 ஔவுமவ்வு மென்ற அக்ஷரமாய் நின்றுலகில்
ஔவைக் கருள்புரிந்த அம்மையே நீ கண் வளராய்
12 அஃதென்ற பொருளதனை அறிந்திட வல்லாற்கு
அஃதாகி நின்றேயருள் அம்மணியே நீ கண் வளராய்
13 கண்ணே என்கண்மணியே கற்கண்டே சற்கரையே
கனியே செங்கரும்பே கற்பகமே நீ கண் வளராய்
14 காணவரும் பக்தர்கட்கு காலபயம் தான் நீக்கி
காக்ஷியளித்தருளும் கண்மணியே நித்திரை போ
15 கின்னரர் கிம்புருடர் கீர்த்தனங்கள் பாடிவர
கண்டே களிகூரும் நல்ல கிளியே நீ கண் வளராய்
16 கீழிருந்து மேல்வரையில் கண்டிருந்த காக்ஷியெல்லாம்
கீர்த்தனமாய் பாடவருள் கோகிலமே நீ கண் வளராய்
17 குத்துவிளக் கெரியக்கோட்டுக் காலகட்டிலின்மேல்
குணமுடை கோவிந்தமு குந்தனுடன் கண் வளராய்
18 கூவிவருங் கோகிலம் போல்கூடிக் குலாவி நீயும்
கூருமடியார்கள் வினை தீர்த்தவளே நீ கண் வளராய்
19 கெருடன் மீதேரிவந்து காக்ஷியதும் தானருளும்
கோவிந்தன் மனதில் வளர்க் கோதையே நீ கண் வளராய்
20 கேதார கௌரி தனைக் கேட்டே மகிழ்ந்திருக்கும்
கேசவனைதான் மணந்த கோதையே நீ கண் வளராய்
21 கைகேயி தன்வரத்தால் காடுசென்ற ராமனுக்கு
கைகொடுத்து மாலையிட்ட கண்மணியே நீ கண் வளராய்
22 கொடியவசுரர்களை கொன்ற ரகு ராமனுக்கு
கொழுங்கொடி முல்லை மலர்ப் பைங்கொடியே கண்வளராய்
23 கோடிசூர்ய பிரகாசமுள்ள கோயிலில் அமர்ந்தவளே
கோவிந்தனுக் குறிய கோமளமே நீ கண் வளராய்
24 கௌசல்யா புத்திரர்கு கௌசிகரால் மாலையிட்டு
கௌஸ்துவா பரணமணி கண்மணியே நீ கண் வளராய்
25 சக்கரை பொங்கலதும் பக்குவமாய் நான்தாரேன்
அக்கரையே சேரவருள் ஆருயிரே நீ கண் வளராய்
26 சாவித்திரி காவித்திரியும் சரஸ்வதியு மானவளே
சாபகானம் புகழும் சண்பகமே நீ கண் வளராய்
27 சித்தாகி சத்துமாகி சின்ம யானந்தமாகி
சித்தாதி தேவர்க்கருள் என்சித்தமே நீ கண் வளராய்

28 சிறிவரும் சர்ப்பமதில் சிறப்பாக பள்ளிகொள்ளும்
ஸ்ரீனிவாசனுடனிருந்த ஸ்ரீதேவி நீ கண் வளராய்
29 பக்தரை காக்கவேண்டி பத்மத்தில் தானுதித்த
பத்மாவதி யென்னும் பெண்ணரசி நீ கண்வளராய்
30 பக்தர்களும் முத்தர்களும் பக்தியுடனே துதிக்க
பரமபதமருளும் பைங்கிளியே நீ கண் வளராய்
31 பாலன் கணபதியுன் பாதம் பணிந்து நிற்க
பக்ஷமுடன் வரம் தருகும் பத்மாவதி நீ கண் வளராய்

## மங்களம்.

இராகம் - சாவேரி - தாளம் - ஆதி-

பல்லவி.

மங்களம் மங்களம் மங்களம் ஸ்ரீ
அலமேலு மங்கைக்கும் (மங்)

அனுபல்லவி.

மங்கை யலர்மேலுக்கும்
மாயவன் மனவிக்கும்
மகிழிந்து கவிபாடும்
மைந்தன் கணபதிக்கும் (மங்)

சரணம்.

பத்மமதி லுதித்த ஸ்ரீ பத்மாவதி தேவிக்கும்
உத்தம மார்கத்தை உபதேசித்த வளுக்கும்
சித்தத்தில் குடிகொண்ட ஸ்ரீதேவி தனக்கும்
பத்தரை காக்கும் நல்ல பாதமலர் தனக்கும் (மங்)
காலபாச மகற்றுங் கமலவல்லி தனக்கும்
காக்ஷிகொடுக்கும் நல் கோமளவல்லிக்கும்
குவலயம் பெற்றெடுத்த கோதை நாயகிக்கும்
குற்றம் பொருத்தருளும் குணமான தேவிக்கும் (மங்)
ஆகாசராஜனுடைய யருந்தவப் புதல்விக்கும்
ஆபத்பாந்தவ யனுதி ரக்ஷகிக்கும்
ஆசர்பாசமருக்கும் ஆனந்த வல்லிக்கும்
அமரர்க்கருள்புரிந்த அமுர்தவல்லி தனக்கும் (மங்)

அரிஅயன் மாலுக்கும் அன்பர்கள் தமக்கும்
கரிமுகன் குமரன் கலைவாணி கல்யாணிக்கும்
அரிய அமரர்கட்கும் அலமேலு மங்கைக்கும்
அன்பன் கணபதிக்கும் அச்சிட்ட ருத்ரைய்யனுக்கும் (மங்)

# கும்மி.

கும்மியடி பெண்காள்—கும்மியடி—உங்கள் கொண்டை குலுங்கவே
கும்மியடி—நம்மையாளும் நாயகி பாதத்தை நாடிகும்மி யடியுங்கடி.

சீர்மேவுந் திருச்சானூர் தனில்வாழ்
செல்வியின் கும்மித் தமிழ் பாட
கார்மேவுங் கபில தீர்த்தக் கரை யிரு
கற்பக பிள்ளையார் காப்பாமே
சர்கரை பழமும் தேங்காயுங் கொண்டு
சந்நதி முன்பாக தான்படைத்து
கற்பூர தீபங்களேத்திகை கூப்பியே
களிப்புடன் கும்மி யடியுங்கடி
வேலுமயிலுடன் கோழிக் கொடிக்கொண்ட
வேலவனை தினம் பாடுங்கடி
வேத வேதாந்த ஸ்ரீ வேங்கட நாதனை
வேண்டிக்கும் மியடியுங்கடி
பாங்குடனே பத்ம தீர்தமதில் நாளும்
பண்புடனே தீவ்ய ஸ்நானம் பண்ணி
தங்காமல் தென்புடன் தாயாரிற் சந்நதி
சார்ந்து கும்மி யடியுங்கடி
கருதுஞ் சுருதிக் கெட்டாத திவ்ய
கழுலன் வாழுந்திடும் சந்தியும்
விருதுகள் பல உடைய சிறிய
திருவடி தெரிசனம் பாருங்கடி.
அற்புதமே மீருங் கோபுரமாமதி
லனேகவானந்த சித்திரமாம்
பொற்த்துவஜஸ்தம்பமும் பலிபீடமும்
பார்த்திட மனமகிழுதடி
நாலு புரத்திலு மாமதிலாமதி
நடுவிலெங்கினு மாளிகையாம்

காலோபலவுங் கொண்டதோர் மண்டபப்
கட்டி யிருக்குது பாருங்கடி
தூயமாமறை களோதுகிறாரிங்கே
துலங்கும் வேத வேதியர் கூடி
தூயநெய் விளக்கு களெங்கு மெரிந்திட
துன்பம் துலைந்தது பாருங்கடி
நெத்தியில் குங்கும் பொட்டு மிட்டு நல்ல
நாகர் ஜடையில்லே தானணிந்து
பத்தியுடன் பத்மாவதி பாதத்தையோ
பணிந்து கும்மி யடியுங்கடி
கையினில் கங்கணம் கலகலென்னவே
கண்டத்தி லட்டி கைசரடு மின்ன
மையினில் முத்தாரம் காசுமாலே பூண்ட
தையலரே கும்மி யடியுங்கடி
கோவிலுக்குப் பல பேர்களுண்டாமவர்
குறித்த முறையாய்ப் பூசை செய்ய
பாவித்த பின்பவர் வேறொருவர்வசப்
படுத்து வாரென்றே கும்மி யடுயுங்கடி
ஆண்டுகள் தோரும் பிர்ம்மோற்சவ மாமதில்
ஆனந்த வைபவ சேவைகளாம்
வேண்டி வந்தோர்களி திருமென்றே கூறி
விறைந்து கும்மி யடியுங்கடி
பூமி எங்கும் புகழ்த் திருப்பதி ஸ்தளமே
பூலோக வைகுண்ட மாகு மென்று
தாமரைப் பூவினில் வாழ்கின்ற லட்சுமி
தாயாரை சேவிப்போம் வாருங்கடி
நவாத்ன மணி மகுடமும் விளங்க
நல் பச்சை முத்து ஹாரங்குலங்க
நாடிவரும் பக்தர்க் கருள் புரிந்திடும்
நாராயணியைப் பாருங்கடி
பாருங்கடி புகழ் கூறுங்கடி தினம்
பாடுங்கடி பாதம் நாடுங்கடி
பாவலர் நாவலர் போற்றும் பாதத்தை
பாடி கும்மி யடியுங்கடி
முத்தியளிதிடுஞ் சன்னதிக்கு நல்ல
மேள தாளங்க ளோதுக்கடி
சத்தம் பெருகிய கண்டாமணி யோசை
சன்னதிக் கோர்வையாம் பாருங்கடி
மூலஸ்தானத்தை கண்மலே நல்ல
முத்தியளித்திடுங் கண்டாயே
மூண்டவினைகளே யறுத்திடும் நல்ல
மங்கை யலர்மேலு பாருங்கடி

பாரோர் புகழவே பங்குனி மாதத்தில்
பிரபல பிர்ம்மோற்ச்சவ மாம்
பத்தாம நாள் காலையில் பக்தர்கள் துதிக்கும்
பஞ்சமி தீர்த்தமாம் பாருங்கடி
தூராதி தூரத் திருந்தமே வெகுபேர்
துரிதமாய் வந்துமே ஸ்னானம் செய்வார்
துன்பங்கள் துலைந்து துரியாதீத நிலை
தூயமுடன் அடைவார் பாருங்கடி
தேவர்கள் போற்றிடும் தெப்போற்சவமதில்
ரேவிக்கு மூன்று நாளுற்சவம்
தேன்மொழி மாதரேதெவிட்டாத திவ்ய
தெரிசின மிதே பாருங்கடி
இத்தனை வைபவம் இக்கலியுகத்தில்
இன்னமும் நடந்து வருகுது பார்
பத்தரை மாத்துள்ள பெண்மணிகாள் நீங்கள்
பாடிக் கும்மி யடியுங்கடி
பாலன் கணபதி பாடிடுங் கும்மியை
பாரிலுள்ள பெண்கள் தான்மகிழ்ந்து
பாங்குடன் பத்மாவதி பாதமணிந்து
பாடி கும்மி யடிங்கடி —தினம்
கூடிக் கும்மி யடிங்கூடி

## வாழி.

### கலி விருத்தம்.

வாழி வானவர் தானவர் தான்வாழ்க
வாழி வேதமும் வேதியரும் வாழ்க
வாழி வேந்தரும் வைஸ்யர் வேளாலரும்
வாழி வையகத் துயிர்களும் வாழிகயே

### விருத்தம்.

பங்கயதுதித்தாள் வாழி பாடிபதிப் பித்தோன் வாழி
செங்கண் மாலயனும் வாழி சரஸ்வதியும் மைவாழி
தங்கு நான் மறைகள் வாழி தாரணி யரசர் வாழி
பொங்கு நூல் வல்லார் வாழி புண்ணியர் வாழி வாழி,

ஸ்ரீ பத்மாவதி அம்மன் பிரதாப வைபவ கீர்த்தனை
முற்றிற்று.

—:o:—

144798

# புத்தக விளம்பரம்.

---

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீவெங்கடேஸ்வர பக்தவிஜயம் | 0 | 6 | |
| திருப்பதி ஏழுமலை வெண்பா | 0 | 1 | |
| திருவேங்கட ஸ்தல புராணம் யாத்திரை வைபவம் | 0 | 4 | |
| லக்ஷ்மி பத்மாவதி சக்களத்தி போராட்டம் | 0 | 1 | 0 |
| வினைதீர்த வேங்கடேசன் | 0 | 2 | 0 |
| பத்மாவதி பிரதாப வைபவ பாட்டு | 0 | 2 | 0 |
| வேங்கடேச சுப்ரபாதம் | 0 | 1 | |
| திருப்பதி திருமலை திவ்விய க்ஷேத்திர மகாத்மியம் 60-பக்கமுள்ள யாத்திரை விஷயமுள்ளதும் விஸ்வரூப படங்களுடன் பெரிய புத்தகம் | 0 | 8 | 0 |
| திருப்பதி ஏழுமலையான் சாக்ஷிசொல்லிய சரித்திரம் | 0 | 0 | 6 |
| ஸ்ரீ வெங்கடேஸ்வர பக்திரச பஜனை கீர்த்தனை, வெங்கடேஸ்வர தோத்திரமாலை கோவிந்தராஜர் சிந்து கும்மி அடைக்கியுள்ளது | 0 | 2 | 0 |
| | 0 | 1 | |
| வெங்கடேஸ்வரர் அஷ்டோத்திரம் | 0 | 1 | |
| கெருட புராண வசனம் | 0 | 12 | |
| மகாவிஷ்ணு பக்த விஜயம் | 2 | 0 | |
| நாலாயிர பிரபந்தம் | 4 | 0 | |
| பண்டரிநாதர் பஜனை கீர்த்தனை | 0 | 4 | |
| ஹரிபஜனை கீர்த்தனை | 0 | 5 | |
| நாமதாஸ் சரித்திரம் | 0 | 6 | |
| நந்தனார் சரித்திர கீர்த்தனை | 0 | 8 | |
| காளாஸ்தி புராணம் | 0 | 6 | |

இன்னும் எங்களிடம் அநேக விதமான புத்தகங்களும் தமி தெலுங்கு புத்தகங்களும் உள்ளது. ஸ்கூலுக்குறிய புத்தகங்களு எங்களிடம் விற்கப்படும்.

**ஸ்ரீவெங்கடேஸ்வர புக்டிபோ,**

எம். வி, ருத்திரய்ய நாயுடு,

பஜார்வீதி, திருப்பதி.